**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 152 /2016 |
| Deposition of witness | | PW- 3 /LW- 6 |
| Name | | திரு. அன்புதுரை |
| Father's/Husband Name | | திரு. கருப்பையன் |
| Village | | வெள்ளதேவன்விடுதி |
| Taluk | | திருவோணம் |
| Age | | 49/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of November 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற முதல்நிலை காவலர் 1375 திரு.மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவோணம் தாலுக்கா வெள்ளதேவன்விடுதி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது உறவினர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும் அ.சா.1 க்கு தெருக்காரர்கள் மற்றும் அ.சா.1 ன் உறவினர்கள். நான் கறம்பகுடி கடைத்தெருவிற்கு சென்று வரும்போது தொலைபேசியில் தொடர்புக்கொண்டு அ.சா.1 ரெங்கராஜனுக்கு அடிப்பட்டு விட்டதாக சொன்னார்கள். நான் எனக்கு 2.30 மணியளவில் தகவல் தெரிந்து அரை மணி நேரத்தில் சம்பவ இடம் சென்றேன். நான் சென்ற போது அ.சா.1 ரெங்கராஜனுக்கு அடிப்பட்டு சட்டை கிழிந்து காயம் ஏற்பட்டு இருந்தது. ஆஜர் எதிரிகள் அனைவரும் ரீப்பர் கட்டையால் மற்றும் கம்பியால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக சொன்னார்கள். சம்பவ இடத்தில் ரீப்பர் கட்டை மற்றும் கம்பியும் கிடந்தது. அ.சா.1 அருகில் அவரது அப்பா நடராஜன் இருந்தார்.

அ.சா.1 ஐ சிகிச்சைக்கு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அ.சா.1 கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தார்கள். இந்த சம்பவதை நான் நேரடியாக பார்க்கவில்லை, போன் மூலம் தகவல் தெரிந்து தான் வந்தேன். நான் அ.சா.1 ஐ 3.00 மணிக்கு வீட்டிலிருந்து பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் விசாரணையில் விநாயகர் ஊர்வலத்தில் ஏதோ பிரச்சனை நடந்ததாக சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில் ரீப்பர் கட்டை மற்றும் கம்பியை காட்டினேன். போலிசார் விசாரணையில் ரீப்பர் கட்டை மற்றும் கம்பி பற்றி வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எதிரிகள் உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை